[1979 மார்ச் 13

அனுப்பும் போது அதனைப் பாதுகாக்கப்பட்ட தண்ணீராகத்தான் (புரொடெக்டட் வாட்டர்) கொடுக்கவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீயணைப்புப் பணிகளுக்குப் புதிய வாகனம்

* வினா எண். 360.— திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) தீயணைப்புப் பணிகளுக்காக சுமார் 18 லட்சம் ரூபாயில் ஒரு வண்டி வாங்க உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதனை புனர் ஆலோசனை செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) சென்னை மாநகருக்குப் பயன்படுவதற்காக சிறப்பு வகை தீயணைப்பு வண்டியை, அதாவது, '' ஸ்னோர்கல் '' தீயணைப்பு வண்டியை புதுடில்லி, பொருள் வழங்கல்— விற்பனைத் தலைமை இயக்குநர் அலுவலகத்தின் மூலமாக வாங்குவதற்காக தீயணைப்புத்துறை இயக்குநர் அனுப்பிய செயற்குறிப்பை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

(ஆ) இதனை மறுபரிசிலனை செய்யும் கருத்து ஏதும் இல்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவரவர்களே, என்னுடைய நத்தம் தொகுதியில் உள்ள சாணார்பட்டி, கொட்டாம்பட்டி யூனியன்களில் தீயணைப்புப் பணிகளைத் தீவிரமாகச் செய்யப் போதிய வசதிகள் தற்போது இல்லை. ஆகையால் அங்கே இன்னொரு தீ அணைப்பு வண்டி வாங்கிக் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த 'ஸ்னோர்கல்' தீ அணைப்பு எஞ்சின் பல மாடிக் கட்டடங்களில் தீ பிடித்தால் அணைக்கப் பயன்படுத்தப்படுவதாகும். இந்த எஞ்சினை வெளிநாட்டிலிருந்து, குறிப்பாக இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்ய மத்திய சர்க்காரை அனுமதி கேட்டிருக்கிறோம். இந்த மாதிரியான தீ அணைப்பு எஞ்சின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களுக்குத் தேவைப்படாது. அங்கு தீ அணைப்பு நிலையம் அமைக்க அரசு தனியாகக் கவனிக்கும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : அங்கே தீ அணைப்பு நிலையம் இப்போது இருக்கிறது. இன்னொரு தீ அணைப்பு வண்டி வாங்குவதுபற்றி கேட்டேன்.

1979 மார்ச் 13]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. • சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, இந்த தீ அணைப்புப் படையிலே, கிணறு குளம் போன்றவற்றில் தவறி விழுந்துவிடுகிறவர்களைத் தேடி எடுப்பதற்கு, தண்ணீரில் மூழ்கித் தேடுவதற்குத் தேவையான கவசம் இல்லை என்று சொல்லப்படுகிறது. என்னுடைய தொகுதியில் ஒருவர் தவறி விழுந்துவிட்டபோது, அவரைத் தேடிப்பார்க்க இந்த கவசம் இல்லாததால் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அப்படிப்பட்ட கவசம் வாங்கித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, தீ அணைப்புப் படையில் பணியாற்றும் ஊழியர்கள் இன்றைக்கு 8 மணி நேர வேலைக்குப் பதிலாக 10 மணி, 15 மணி நேரம் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வண்டி வாங்குகிற பிரச்சனை ; தொழிலாளர் பிரச்சனை அல்ல.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, தீ அணைப்பு நிலையம் தாலுகாவிற்கு ஒன்று என்ற வீதத்தில் இருக்கிறது. சில தாலுகாக்களில் ஏராளமான கிராமங்கள் அடங்கியிருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் தீ விபத்து ஏற்பட்டால், 20, 30 மைல் தூரம் போய் தீ அணைப்புப் பணியைச் செய்ய வேண்டியிருப்பதால், இந்த தீ அணைப்பு வண்டி போய்ச் சேருவதற்கு முன்னால் குடிசைகள் எரிந்துவிடுகின்றன. ஆகையால் அதிகமான கிராமங்கள் இருக்கின்ற தாலுகாக்களுக்கு 'சப் தீ அணைப்பு நிலையம்' அமைக்க அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தேவைக்கும் நிதி நிலைமைக்கும் ஏற்ப அவ்வப்போது தீ அணைப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையில் புதிதாக 20 தீ அணைப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் தீ அணைப்பு நிலையமே இல்லாத முதுகுளத்தூரில் ஒரு தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு இடத்திற்கும் இருக்கிறதா என்று கேள்வி கேட்டு நேரத்தை வீணாக்க வேண்டாம். திரு. அரங்கநாதன் கேட்டதைப்போல சில குறிப்

பிட்ட பிரச்சனைகளைச் சொல்லி வேண்டுமானால் கேட்கலாம். அந்த ஊரில் உண்டா, இந்த ஊரில் உண்டா என்று கேட்டால் அமைச்சரிடம் அதற்கான பதில் இருக்காது.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பெரிய நகரங்களான மதுரை, கோவை, சேலம், திருச்சி போன்ற இடங்களில் பல மாடிக் கட்டடங்கள் உயர்ந்து வருகின்றன. இன்றைக்கு இருக்கிற வசதிகளைக்கொண்டு அவைகளில் ஏற்படுகிற தீயை அணைக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த நவீன தீ அணைப்பு இயந்திரத்தை அந்தப் பகுதிகளுக்கு விஸ்தரிக்கவும், அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிற பெரிய தொழிற்சாலைகள், நூற்பாலைகள், தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்ற பகுதிகளுக்கும் இந்த வசதியை விஸ்தரிக்கவும் அரசு தொடர்ந்து முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த தீ அணைப்பு எஞ்சின் விலை 18, 22, 442 ரூபாய் ஆகிறது. இதை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதால் அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது. ஆகவே, மத்திய அரசின் ஒப்புதலோடு அவர்கள் மூலமாகத்தான் வாங்க வேண்டியிருக்கிறது. முதலில் இந்த ஒரு எஞ்சினை வாங்கிப் பார்ப்போம். அதன் அனுபவத்தைப் பார்த்து, மற்றவைகளைப் பார்ப்போம்.

குடியாத்தம் காவல் நிலையக் கட்டடம்.

* வினா எண் 361— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடியாத்தம் காவல் நிலையம் பழுதடைந்துவிட்ட காரணத்தினால் புதிதாகக் கட்ட வேண்டுமென்று கருதி எப்போது இடிக்கப்பட்டது ?

(ஆ) இதற்கான புதிய கட்டடம் எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) குடியாத்தம் நகர் காவல் நிலையம் பழுதடைந்துவிட்ட காரணத்தினால் அரசு ஆணை எண் 2459 உள்துறை நாள் 22.9.72-ன்படி இடிக்கப்பட்டது. தற்போது, இக்காவல் நிலையம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) புதிய காவல் நிலையக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் புதிய கட்டட வேலைக்கான தடை உத்தரவு நீக்கிய பிறகு எடுத்துக்கொள்ளப்பட இருந்தது. இருப்பினும், இதன் அவசியத்தை உணர்ந்து இது பற்றிய வரைவுப் படம் மற்றும் மதிப்பீடுகள் அடங்கிய செயற்குறிப்புகளைக் காவல் துறைத் தலைவர் அனுப்பியிருக்கிறார். அவை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.